## CC.NO. 88/2016 DW-1

நாள் : 08.04.2025

பெயர் : பாஸ்கரன்

த/பெ : கிருஷ்ணன்

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கில் புகார்தாரர் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்ள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். அந்த ஆவணங்களை நீங்கள் மறுக்கவில்லை என்றால் இல்லை மறுக்கிறேன். ம.சா.ஆ.4 ஆவணம் வேண்டாம்மாள் என்பவருக்கு முத்து எழுதிகொடுத்த ஆவணம் என்றால் ஆமாம். அதில் கண்டுள்ள இடம் ஒன்று தான் ஆனால் சர்வே எண் தவறு. ம.சா.ஆ.4 சொத்து அட்டவணையில் சர்வே எண் 126/2 மற்றும் அதன் செக்குபந்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பழைய சர்வே எண் 126/2 புதிய சர்வே எண் 126/2பி என குறிப்பிடப்பட்டுள்ளது. உங்கள் வாதப்படி சொத்தின் செக்குபந்திகள் சரியாக உள்ளது ஆனால் சர்வே எண் தவறாக உள்ளது என்றால் ஆமாம்.

சர்வே எண் 126/2பி தவறு என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் முன்னிலைப்படுத்தியுள்ளீர்களா என்றால் திருத்தல் பத்திரம் மற்றும் FMB தாக்கல் செய்துள்ளேன். அந்த திருத்தல் பத்திரம் வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். ம.சா.ஆ.4 ஆவணத்தில் முத்து வேண்டாம்மாளுக்கு சொத்தை விற்ற மீது சொத்தை அவர் நிறுத்தி வைத்ததாக குறிப்பு காணப்படுகிறதா என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போல் முத்து வேண்டாம்மாளுக்கு விற்ற சொத்தை

தவிர்த்து மீது சொத்தை அவர் நிறுத்தி வைத்திருந்தால் அந்த விவரம் செக்குபந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். ம.சா.ஆ.5 ஆவணம் முத்து உங்களுக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் ஆமாம்.

ம.சா.ஆ.5 அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது நான் அதை தற்போது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துகிறேன். அந்த ஆவணத்தின்படியும் சர்வே எண் 126/2சி என்று தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் 126/2சி என்று திருத்தம் செய்யப்பட்டதாக காணப்படுகிறது. உங்கள் கிரயத்திற்கு முந்தைய கிரய பத்திரமான முத்து வேண்டாம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தில் சர்வே எண் 126/2பி என்று தான் காணப்படுகிறது என்றால் ஆமாம். சர்வே எண் 126/2எ, 126/2சி முத்துவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு நீங்கள் ஆவணம் எதையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ஆமாம். முத்து பெயரில் சர்வே எண் 126/2எ மற்றும் 126/2சி உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தகவல் உரிமை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளேன். அந்த அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் அது எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சிப்காட் காவல் நிலையத்தில் நீங்கள் பொது வழியை ஆக்கிரமிப்பு செய்து போலியான ஆவணம் தயார் செய்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. என்னை போலீசார் புகார் தொடர்பாக அழைத்து விசாரிக்கவில்லை. மாவட்ட கண்காணிப்பாளரிடத்திலும் உங்களுக்கு எதிராக புகார் கொடுக்கபட்டது அதையும் நீங்கள் உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி

நிறுத்திவிட்டீர்கள் என்றால் சரியல்ல. தற்போது காட்டப்படும் புகைபடத்தில் உள்ள வீடு யாருடையது என்றால் புகார்தாரரின் அண்ணன் தங்கவேலுவின் வீடாகும். **அந்த புகைப்படம் ம.சா.ஆ.9 ஆக குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** உங்களால் தாக்கல் செய்யப்பட்ட மாண்புமிகு உயர் நீதிமன்ற WP.No.27455/2009 ல் வட்டாட்சியருக்கு விசாரணை செய்து முடிவு எடுக்கும் படி உத்திரவு பிறப்பித்துள்ளது என்றால் ஆமாம்.

இந்த வழக்கு நீங்கள் மோசடியாக சர்வே எண் 126/2சி குறித்து ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது தான் என்றால் ஆமாம் ஆனால் நான் எந்த ஆவணமும் மோசடியாக தாக்கல் செய்யவில்லை. உங்களால் தாக்கல் செய்த எ.சா.ஆ.5 சொத்தை நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள் என்பதை காட்டுவதற்கு தான் என்றால் ஆமாம். உங்களுடைய பத்திரத்தில் காணப்படும் சர்வே எண் 126/2சி தவறு என்று தான் உங்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ளீர்கள் என்றால் ஆமாம். ஆனால் உங்களால் தாக்கல் செய்யப்பட்டது எ.சா.ஆ.5 சர்வே எண் 126/2சி1 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் என்னுடைய பத்திரம் என் தாயார் வசம் இருந்தது பிற்பாடு நான் அதை பார்த்த போது தான் சர்வே எண் 126/2சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை கண்டறிந்தேன். எ.சா.ஆ.5 ஆவணம் 23.02.2024 அன்று தான் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அதனுடைய Manuscript என்னிடம் உள்ளது.

நீங்கள் முத்து ஆகியோர் பொதுவழியை ஆக்கிரமிப்பு செய்தவதற்காக போலி ஆவணம் தயார் செய்துள்ளீர்கள் அதிலிருந்து தப்பிக்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள்

என்றால் சரியல்ல. எனவே நீங்கள் மோசடி ஆவணம் தயார் செய்த குற்றத்திற்காக தண்டிக்க வேண்டிய நபர் என்று சொன்னால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by NAVEEN DURAIBABU
Date: 2025.04.09 16:04:19 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.